DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC .214/2020
**Depositions of PW 6 Witness for**

| Name | காசிராஜன் | Caste | |
|---|---|---|---|
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th Day of October 2025

Signature of Witness.

<u>14-10-2025</u>
(எதிரி ஆஜர்.)
<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் அம்மாபட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.01.2020-ஆம் தேதி 23.30 மணிக்கு சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் உதவிஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, போஸ் காலனியை சேர்ந்த சுந்தரம் மகன் ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி, கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண் 10/2020 இதச பிரிவுகள் 279, 304(ஏ) இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது .

2) பின்னர் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு முன்வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றம் எவ்வளவு தூரத்தில் அமைந்துள்ளது என்றால் சுமார் 5 கி.மீ தூரத்தில் உள்ளது. காவல் நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றால் எவ்வளவு நேரமாகும் என்றால் போக்குவரத்து நெருக்கடி உள்ளதால் சுமார் 30 நிமிடங்கள் ஆகும். நான் சொன்ன நாள், நேரத்தில் அ.சா.1 ராஜா என்பவரிடமிருந்து புகார்மனு பெறவில்லை என்றாலும், சொன்ன மாதிரி வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.